DT. 16/09/18

# பிளாஸ்டிக்கை ஒழிக்க வியாபாரிகள் பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை

## ◆ அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வேண்டுகோள்

கோவை, செப்.16-

பிளாஸ்டிக்கை ஒழிக்க வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை என்று அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவை மாவட்டம், பேரூர் வட்டம், பூண்டி வெள்ளிங்கிரி ஆண்டவர் திருக்கோவில் அருகாமையில் சுற்றியுள்ள பகுதிகளில் (15.09.2018) தூய்மையே சிறந்த சேவை இயக்கம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கழக அமைப்பு செயலாளர், கோவை புறநகர் மாவட்ட கழக செயலாளர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு, தமிழ்நாடு அரசின் பிளாஸ்டிக் ஒழிப்பு இயக்க விளம்பர தூதுவர் நடிகர் விவேக் ஆகியோர் துப்புரவு பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேசியதாவது:-

பாரத பிரதமர் தூய்மை பாரதம் திட்டத்தினை கடந்த 2014ம் ஆண்டுமுதல் தேசம் முழுவதிலும் செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில், தமிழ்நாடு அரசும் தூய்மை பாரத திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. மேலும், கிராமப்புறங்களில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த தாய் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. 65000 தூய்மை காவலர்கள் நியமனம் பணியமர்த்தப்பட்டு கிராமங்களில் தினந்தோறும் தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் அரசு மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்



தில் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தூய்மை பணிகளின் ஒருப்பகுதியாக 12 மாநகராட்சிகள், 12524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகள், 123 நகராட்சிகளில் தூய்மை காவலர்கள் மூலம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து மறுசுழற்சி மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்படுகின்றது. மேலும் கிராமப்புறங்களில் நகர்புறங்களை போலவே குடிநீர் தேவையில் தன்னிறைவு பெற செய்ய குழாய்களில் குடிநீர் வழங்கும் ஒரே மாநிலம் தமிழகம் தான். மேலும் 99 சதிவிகித கிராமங்களில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

தேசிய அளவிலான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் 11.9.2018 அன்று நடத்தப்பட்ட விருது வழங்கும் விழாவில், தமிழ்நாட்டில் 2017-18-ம் நிதியாண்டில் குறித்த காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் தாமதமாக வழங்கப்பட்ட ஊதியத்திற்கு இழப்பீடு வழங்குவதில் சிறந்த செயல்பாடு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் உருவாக்கப்படும் சொத்துக்களுக்கு புவிக்குறியிடுதலில் சிறந்த முயற்சிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்து ஊதியம் செலுத்துதலில் சிறந்த செயல்பாடு, ஆகியவற்றிற்காக தேசிய அளவிலான 3 மாநில விருதுகளும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காக தேசிய அளவிலான 2 மாவட்ட விருதுகளும் மற்றும் கிராம ஸ்வராஜ் அபியான் இயக்கத்தின் கீழ், குறிப்பிட்ட 7 முக்கியத் திட்டங்களை தன்னிறைவுடன் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக, தேசிய அளவிலான மாவட்ட விருதும், என மொத்தம் 6 விருதுகள் தமிழகம் பெற்றுள்ளது.

ஒருமுறை உபயோகிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் மனித பயன்பாடு சராசரியாக வெறும் 12 நிமிடங்கள் மட்டுமே என்று ஒரு ஆய்வு கூறுகின்றது. ஆனால் இப்பொருட்கள் மக்குவதற்கு 100 முதல் 1000ம் ஆண்டுகள் வரை ஆகின்றது. மனிதனுக்கு தீங்கு விளைவிப்பதுடன், கால்நடைகள், நீர்நிலைகள், நீர்வாழ் உயிரினங்கள் என ஒட்டுமொத்த இயற்கை சமச்சீர் நிலைகளை பாதிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினை தவிர்க்க பொதுமக்கள், வியாபாரிகள், சில்லறை வணிகர்கள் என அனைத்து தரப்பினரும் தங்களின் பங்களிப்பினை வழங்கிட வேண்டும். மேலும் பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கையை ஒரு சவாலாக எதிர்கொண்டு செயல்படுத்தி வரும் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையிலான கழக அரசிற்கு வலுசேர்க்கும் வகையில் நாம் அனைவரும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடுகளை தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித்துறையின் கூடுதல் தலைமை செயலாளர் ஹன்ஸ்ராஜ்வர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் த.ந.ஹரிஹரன், மத்திய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் இணைச் செயலாளர் அருண்பரோகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ரூபன்சங்கர்ராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பத்மாவதி, கழக நிர்வாகி என்.கே.செல்வதுரை, உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள், தன்னார்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.